பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 07 | வியாழக்கிழமை | 21.03.2024 | அதிர்வு 233

அத்துமீறிய தமிழக மீனவர்களின்

## படகை மீட்க வந்த படகின் உரிமையாளருக்கும் மறியல்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் பிடிபட்ட தமிழக மீனவர்களின் படகை மீட்க, அங்கிருந்து விமானம் மூலம் இலங்கைக்கு வந்த படகின் உரிமையாளரும் சிறையில் 06

# சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்த சஜித்

## எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பங்கேற்பு பல விடயங்கள் தொடர்பில் கலந்தாய்வு



பொறுப்புள்ள கட்சி என்ற ரீதியில், இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் ஆழத்தையும் சிக்கலையும் ஐக்கிய மக்கள் சக்தி நன்கு புரிந்துகொண்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 07

# தயாசிறி தலைமையில் புதிய கூட்டணி உதயம்




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தலைமையில் மனிதநேய மக்கள் கூட்டணி நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பலர் கலந்துகொண்டனர்.

சில அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் மனிதநேய மக்கள் கூட்டணியுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

# யாழில் கடலில் மூழ்கி இருவர் பரிதாபச் சாவு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், இளவாலை – சேந்தாங்குளம் கடற்கரையில் குளிக்கச் சென்ற இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சேந்தாங்குளம் கடற்கரையில் நேற்று நீராடச் சென்ற மூவரில் இருவர் காணாமல்போன நிலையில், இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். 07



இலங்கையில் மிக உயர்வான – உச்ச – நீதி ஆயம் உயர்நீதிமன்றமே.

அதன் தீர்ப்புக்கு – உத்தரவுக்கு – எதிராக மேன்முறையீடு செய்யவோ (Appeal), மீளாய்வு செய்யவோ (Revision) இடமில்லை.

ஆயினும் உயர் நீதிமன்றத்தின் உத்தரவு அல்லது தீர்ப்பு அல்லது கட்டளை தொடர்பில் ஏதேனும் குழப்பம் அல்லது தவறான அர்த்தப்படுத்தல் இருக்குமானால், அந்த விடயத்தை மீள்பார்வை (Review) செய்யும்படி விண்ணப்பிக்கலாம். 06

# அஸ்வெசும பயனாளிகள் 14,000 பேரை வலுவூட்டுவதற்கு விசேட வேலைத்திட்டம்

## சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவிப்பு



**“அஸ்வெசும பயனாளிகள் 14 ஆயிரம் பேரை வலுவூட்டுவதற்கான விசேட வேலைத் திட்டத்தை சிறுதோட்ட அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து செயற்படுத்தவிருக்கின்றோம். கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஊடாக களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களை மையமாகக் கொண்டு 10 ஆயிரம் நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது.”**

**-இவ்வாறுசமூலவலுவூட்டல்இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

”ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் “அவஸ்வசும வேலைத்திட்டத்திற்கு“சமுர்த்தி திட்டத்தை விடவும் மூன்று மடங்கு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி சமூர்த்திக்காக 60 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், அஸ்வெசும திட்டத்திற்காக 180 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த பொருளாதார நெருக்கடியினால் பெருமளவில் கஷ்டங்களை எதிர்கொண்ட மக்களுக்கான நிவாரணமாகவே அதனை வழங்குகிறோம்.

மேலும், பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டும் நோக்கில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் திறைசேரி என்பன இணைந்து மேலதிக நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளன. அதன் கீழ், அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் உள்வாங்கி, கிராம சேவகர் பிரிவொன்றுக்கு 07 பேர் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, யுேஜவுயு மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பன இணைந்து வேலைத்திட்டம் ஒன்றையும் செயற்படுத்தவுள்ளன. அங்கு பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்வோருக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும், அஸ்வெசும பயனாளிகள் 14 ஆயிரம் பேரை வலுவூட்டுவதற்கான விசேட வேலைத்திட்டத்தை சிறுதோட்ட அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து செயற்படுத்த எதிர்பார்க்கப்படுவதோடு, 2000 ஹெக்டயாரில் தேயிலை நடுகைச் செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், மீன்பிடித் தொழிலுக்கு விசேட கடன் நிவாரணம் வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், கடற்றொழில் அமைச்சு, சமூக வலுவூட்டல் அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி வங்கியுடன் இணைந்து உவர்-நன்னீர் மீனவக் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான சலுகைக் கடன்களை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் கடல் அட்டை உற்பத்திக்காக 400 குடும்பங்களுக்கு சலுகைக் கடன் வழங்கப்படவுள்ளது. மீன்பிடி படகுகள் உள்ளிட்ட மீன்பிடித் தொழில்துறைக்கு அவசியமான உபகரணங்களை வழங்குவதே இத்திட்டதின் பிரதான நோக்கமாகும்.

மேலும், பனை,கித்துள், தென்னை போன்ற உற்பத்திகளுக்கு தரப்படுத்தப்பட்ட “கள்ளு அனுமதி” வழங்குவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகிறது. செயற்கை உற்பத்திகளுக்கு மாறாக, இயற்கை மதுபான உற்பத்தியை மேற்கொண்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஊடாக களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களை மையமாகக் கொண்டு 10 ஆயிரம் நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தை ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கிறோம். உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், சீனாவின் சோங்சிங் பிராந்தியத்தில் உள்ள 33 தொழில் பயிற்சி நிறுவனங்களுடன் பல ஒப்பந்தங்களில் கைசாத்திடவும் அமைச்சு தீர்மானித்துள்ளது. அதனூடாக ஒரு இலட்சம் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் வழங்கப்படவிருப்பதாகவும், இத்திட்டங்களின் மூலம் 03 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களை வலுவூட்ட எதிர்பார்த்திருக்கிறோம்.” – என்றார்.






# பெரும்பான்மை பலத்தால் தவறுகளை மூடி மறைத்தால் வன்முறை வெடிக்கும்

## உதய கம்மன்பில எம்.பி. எச்சரிக்கை



**“பெரும்பான்மை பலத்தை கொண்டு தவறுகளை தொடர்ந்து மூடி மறைத்தால் மக்கள் வன்முறையை கையில் எடுப்பார்கள். ஆகவே ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் தரப்பினர் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.”**

**- இவ்வாறு நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சிரேஷ்ட அரசியல்வாதி என்ற நன்மதிப்பை பெற்றிருந்தார். 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை தொடர்ந்து சபாநாயகர் பதவிக்கான தெரிவு இடம்பெற்ற போது எதிர்க்கட்சியினர் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தனவை நியமிக்க ஆதரவு வழங்கினார்கள். எதிர்க்கட்சியினர் வைத்த நம்பிக்கையை அவர் பாதுகாக்கவில்லை. இதனால் தான் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்துள்ளார்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது ஆளும் தரப்பினர் “சபாநாயகர் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை மீறவில்லை, சபாநாயகர் சரி என்பதால் தான் உயர் நீதிமன்றம் எம்.ஏ. சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரித்துள்ளது, இல்லாத பிரச்சினையை தோற்றுவிப்பதற்காகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.எம்மிடம் பெரும்பான்மை உள்ளது. ஆகவே நாங்கள் சபாநாயகரை பாதுகாப்போம்“ என்று தன்னிச்சையாக குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது.

இணையவழி பாதுகாப்பு சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் குழுநிலை வேளையின் போது சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. தவறுகளை எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சபாநாயகரிடம் சுட்டிக் காட்டினோம். ஆனால் அவர் அதனை பொருட்படுத்தவில்லை. இதன் பெறுபேறே இன்று நம்பிக்கையில்லா பிரேரணையாக வெளியாகியுள்ளது.

நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது என்பதால் தான் எம்.ஏ. சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் இரத்து செய்தது. உலக நாடுகளில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டதன் பின்னர் அதன் அரசலமைப்பு இயங்கு நிலை தொடர்பில் ஆராய நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இலங்கையில் அந்த நிலைமை கிடையாது.

சபாநாயகர் பதவி வகிப்பவர் அரசியலுக்கு அப்பாற்பட்டு சுயாதீனமான முறையில் அரசமைப்புக்கு அமைய செயற்படுவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அரசமைப்பின் 80 ஆவது உறுப்புரை நீக்கப்பட்டு அந்த அதிகாரம் சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை மாத்திரமல்ல, அரசமைப்பின் நம்பிக்கையையும் இல்லாதொழித்துள்ளார்.

பெரும்பான்மை எம்மிடம் உள்ளது என்று ஆளும் தரப்பு தன்னிச்சையாக செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவையும் அரசாங்கம் பாதுகாத்தது. கெஹலியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது நாடாளுமன்றத்தில் பல விடயங்கள் பேசப்பட்டன. மக்கள் அதனை உன்னிப்பாக ஆராய்ந்தார்கள்.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக அமைச்சரவை அமைச்சர் ஒருவரை கைது செய்யப் பொலிஸாருக்கு தைரியம் வந்துள்ளது. நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட்டு இன்று கெஹலிய ரம்புக்வெல்லவை சிறையில் அடைத்துள்ளது.ஆகவே பெரும்பான்மை எப்போதும் வெற்றிப்பெறாது.

பெரும்பான்மை பலத்தை கொண்டு தவறுகளைத் தொடர்ந்து மூடி மறைத்தால் மக்கள் வன்முறையைக் கையில் எடுப்பார்கள். ஆகவே ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் தரப்பினர் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும்” – என்றார்.

# கோட்டாவே குற்றவாளி!



## தயான் பதிலடி

ஜனாதிபதிப் பதவியிலிருந்து தான் துரத்தப்பட்டமைக்குத் தமிழர்களும், முஸ்லிம்களும் அரகலய போராட்டத்தில் பங்கேற்றமையே காரணம் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது நூலில் குற்றஞ்சாட்டியுள்ளமைக்கு அவரைத் தேர்தலில் களமிறக்குவதற்காகப் பாடுபட்ட கலாநிதி தயான் ஜயதிலக கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றில் தயான் ஜயதிலக எழுதியுள்ள விமர்சனத்தில், “அரகலய போராட்டத்தில் பங்கேற்றவர்கள் சிங்கள – பௌத்த கிராமப்புற விவசாயிகளின் பிள்ளைகள். கோட்டாவின் திட்டங்கள் காரணமாக கிராமப்புறங்களிலிருந்த படையினரின் குடும்பங்களும் உறவினர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். கோட்டாவே குற்றவாளி. எனவே, கோட்டாவை யாரும் வெளியேற்றவில்லை. ஆயுதமற்ற மக்கள் சக்தியின் மூலமே அவர் வெளியேற்றப்பட்டார்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.




# நாடாளுமன்ற மரபுகளை பாதுகாக்க சபாநாயகர் மஹிந்த தவறியுள்ளார்!

## ஹக்கீம் சபையில் குற்றச்சாட்டு

“நிறைவேற்றுத்துறையின் தேவைக்காக செயற்படாமல் நாடாளுமன்ற மரபுகளை பாதுகாப்பதே சபாநாயகரின் பொறுப்பு. அதனை அவர் செய்ய தவறியுள்ளார். அதனாலேயே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர தீர்மானித்தோம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாது தினமாக இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –



“இந்த நாடாளுமன்ற காலத்தில் பல்வேறு விடயங்கள் எங்களுக்குக் காணக்கூடியவையாக இருந்தன. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பதவி விலகினார். அதன் பின்னர் அமைச்சரவை பதவி விலகியது. அதனைத் தொடர்ந்து பதில் ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்றம் மூலம் தெரிவு செய்யப்பட்டமை, தற்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறது.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை நாங்கள் உடனடியாகக் கொண்டுவந்தது அல்ல. பல சந்தர்ப்பங்களில் அவர் சபையின் பொறுப்பைப் பாதுகாக்க தவறி வந்துள்ளார்.

குறிப்பாக இணையவழி காப்புச் சட்டத்தை சபையில் அனுமதிக்கும்போது, அது தொடர்பாக இருந்த குறைபாடுகளை நாங்கள் சுட்டிக்காடியிருந்தபோதும் சபாநாயகர் அதனைக் கண்டு கொள்ளாமல் செயற்பட்டார்.

இணையவழி காப்புச் சட்டத்தில் 44 திருத்தங்கள் காணப்பட்டன, அதில் 31 வாசகங்களுக்கு உயர் நீதிமன்றம் திருத்தம் மேற்கொண்டிருந்தது. அந்த திருத்தங்கள் முறையாக மேற்கொள்ளாமலேயே அந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் அனுமதிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுத்தார்.

சபாநாயகரின் இந்த நடவடிக்கைக்கு நாடாளுமன்ற அதிகாரிகளும் பொறுப்பாவர். சபாநாயகர் தவறு செய்யும்போது அதனை சுட்டிக்காட்டி திருத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும். அதனை அவர்கள் செய்யத் தவறி இருக்கின்றனர்.”– என்றார்.










# மகாவலி திட்டத்தில் கைவிடப்பட்ட ஏ,பி வலயங்களில் துரித அபிவிருத்தி

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி காமினி திஸாநாயக்காவுக்குப் புகழாரம்

நாட்டை நவீன விவசாயப் பொருளாதாரத்தை நோக்கி நகர்த்தும் பயணத்தின் போது, மகாவலி திட்டத்தில் கைவிடப்பட்ட ஏ, பி வலயங்களை விரைவாக அபிவிருத்தி செய்து அதன் பலனை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

இந்த நாட்டின் நீர்ப்பாசன வரலாற்றில் தனித்துவமான மாற்றத்தை ஏற்படுத்திய, மகாவலி திட்டதை காமினி திஸநாயக்க செயற்படுத்தியிருக்காவிடின் இன்று நாடு அரிசியில் தன்னிறைவு அடைந்திருக்காதெனவும் நாட்டுக்கு அவசியமான மின்சாரத்தை பெற முடியாமல் போயிருக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் 82 ஆவது ஜனன தின நிகழ்வில் நேற்று கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள காமினி திஸாநாயக்கவின் சிலைக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

காமினி திஸாநாயக்கவின் கடந்த கால நினைவுகளை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அன்னாரின் அர்ப்பணிப்பு அனைவருக்கும் முன்னுதாரணமாகும் என்றும் கூறினார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காமினி திஸாநாயக்கவின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் காமினி திஸாநாயக்க மன்றத்தின் உப தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க வரவேற்புரை ஆற்றினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, காமினி திஸாநாயக்கவின் பாத்திரம் ஓர் அரசியல் முன்னுதாரணம் என்று குறிப்பிட்டார்.

மக்களுக்கு சேவை செய்வதன் மூலம்தான் அவர் பிரபலமடைந்தார் எனச் சுட்டிக்காட்டிய கரு ஜயசூரிய, அவரின் சரியான முகாமைத்துவம் இலங்கையை துரிதமாக அபிவிருத்தி செய்ய உதவியது என்றும் குறிப்பிட்டார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநரும் காமினி திஸாநாயக்க மன்றத்தின் தலைவருமான நவின் திஸாநாயக்க உரையாற்றுகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர் என்ற ரீதியில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார முறை நாட்டுக்கு ஏற்றது என தனது தந்தை எப்போதும் கூறி வந்தார் என்று தெரிவித்தார். எதிர்காலத்திலும் நடுநிலையான வலதுசாரி இயக்கம் உருவாகும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறானதொரு தலைவர் மக்களால் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில். அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்துமபண்டார, ராஜித சேனாரத்ன, வடிவேல் சுரேஷ், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சம்பிகா பிரேமதாஸ, ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உட்பட பல அரசியல் பிரதிநிதிகள் மற்றும் காமினி திஸாநாயக்கவின் குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.








# முன்னிலை சோஷலிசக் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற 29 பேர் கைது!



கொழும்பில் முன்னிலை சோஷலிச கட்சியின் ஆர்ப்பாட்ட பேரணியில் இரண்டு பிக்குகள் பங்கேற்ற 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னிலை சோஷலிசக் கட்சியின், மக்கள் போராட்ட அமைப்பு நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் மரணப் பொறியை முறியடிப்போம், வரிச்சுமை, பொருள்களின் விலையேற்றம் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி, மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கோட்டை பஸ் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பான நிலையில், புறக்கோட்டை பகுதியை நோக்கி பயணித்த போது, பொலிஸாரால் தடையேற்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அமைதியின்மை ஏற்பட்டதுடன், ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்புகை பிரயோகத்தையும் நடத்தியிருந்தனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தகைய மீள் பார்வைக்கான விண்ணப்பம் செய்யப்படுமானால் அது குறித்து என்ன செய்வது என்று பிரதம நீதியரசரே தீர்மானம் எடுக்க வேண்டும்.

வழமையாக அப்படி ஒரு விண்ணப்பம் வந்தால் தீர்ப்பு வழங்கிய நீதியரசர் ஆயத்திடம் பிரதம நீதியரசர் முதலில் கருத்து கேட்பார்.

அதன்பின்னர் மீள்பார்வைக்கு இணங்கி மேலும் அதிக எண்ணிக்கை நீதியரசர்கள் கொண்ட ஆயத்திடம் அந்த விண்ணப்பத்தின் அடிப்படையிலான மீள்பார்வைக்கு அவர் வழி செய்யலாம். அல்லது மீள்பார்வைக்கான விண்ணப்பத்தை பிரதம நீதியரசரே தீர்மானம் எடுத்து நிராகரிக்கலாம். கவனிக்காமலும் விடலாம்.

இந்த விடயங்கள், விவரங்கள் எல்லாம் ஏன் இப்போது என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். காரணம் உண்டு.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இப்போது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுகின்றது. இன்று மாலை அதன் மீதான வாக்கெடுப்பு நடக்க உள்ளது.

இந்தச் சமயத்தில்தான் அந்த விவகாரத்தை ஒட்டிய ஒரு விடயம் உயர்நீதிமன்றத்தின் மீள்பார்வைக்கு விண்ணப்பிக்கப்பட்டிருக்கின்றது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கும் பரிந்துரைக்கும் முரணாக அந்தச் சட்ட விவகாரத்தில் சபாநாயகர் நடந்து கொண்டிருக்கின்றார், உயர்நீதிமன்ற வழிகாட்டல்படி சட்டமூலம் திருத்தப்படாத நிலையில், அது சட்டமாவதற்கான சான்றுரையை சபாநாயகர் வழங்கியுள்ளார் என்பது இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒட்டி சபாநாயகருக்கு எதிராகச் சுமத்தப்படும் பிரதான குற்றச்சாட்டாகும்.

இந்த விடயத்தை ஒட்டி நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

சபாநாயகரின் சான்றுரைக்கப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டம் சட்டப்படி செல்லுபடியற்றது என்று உத்தரவிடுமாறு அந்த மனுவில் சுமந்திரன் கோரியிருந்தார்.

ஆனால் –

சபாநாயகர் சான்றுரைத்த எந்த ஒரு சட்டத்தின் செல்லுபடி தன்மை குறித்தும் எந்த நீதிமன்றமும் விசாரிக்க முடியாது என்ற அரசமைப்பு ஏற்பாட்டைச் சுட்டிக்காட்டி, அதன் காரணமாக சுமந்திரனின் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்க முடியாது என்று உயர் நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

அந்த உத்தரவை மீன்பார்வை செய்யும்படி கோரியே இப்போது உயர்நீதிமன்றத்திடம் சுமந்திரன் நேற்று மனுத் தாக்கல் செய்திருக்கிறார்.

இந்த மீள்பார்வைக் கோரிக்கை தொடர்பில் தற்போதைய பிரதம நீதியரசர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றார், இதனை எப்படி அணுகிக் கையாளப் போகின்றார் என்பதை இனித்தான் பார்க்க வேண்டும்.

இதே போன்ற மனு ஒன்று முன்னர் பிரசாத் டெப் பிரதம நீதியரசராக இருந்த போதும் சமர்ப்பிக்கப்பட்டது. அவர் உயர் நீதிமன்றத்தின் அனைத்து நீதியரசர்களிடமும் அந்த மனுவைக் கையளித்து, கருத்துக்களைப் பெற்று, அதன் அடிப்படையில் அந்த மனுவை அப்போது நிராகரித்திருந்தார்.

இப்போது சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்த மூன்று நீதியரசர்கள் ஆயத்தில் ஒருவர் அன்று அந்த தீர்ப்பை வழங்கிய தினத்தோடு ஓய்வு பெற்றுச் சென்று விட்டார்.

மற்றைய இரு நீதியரசர்களிடமும் கருத்துக் கேட்டு, அதன் பின்னர் உரிய நடவடிக்கையை பிரதம நீதியரசர் எடுப்பாரா? அல்லது உயர்நீதிமன்றத்தின் பிற நீதியரசர்கள் அனைவரிடமும் அவர் கருத்து கேட்டு அதன் பின் முடிவு செய்வாரா? அல்லது தாமே முடிவெடுத்து ஒன்றில், மூன்றுக்கு மேல் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட புதிய ஆயத்திடம் மீள்பார்வை மனுவை விசாரிக்கக் கையளிப்பாரா? அல்லது தாமே முடிவு செய்து மனுவைத் தள்ளுபடி செய்வாரா?

தெரியவில்லை. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## படகை மீட்க வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடைக்கப்பட்டார்.

மன்னார் கடற்பரப்புக்குள் இந்த ஆண்டு ஜனவரி மாதம் எல்லை தாண்டி மீன்பிடித்த வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் மூலம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட தமிழக மீனவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் படகுகள் நீதிமன்ற உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. அந்தப் படகுகளுக்கான விசாரணை நேற்றைய தினத்துக்குத் திகதியிடப்பட்டிருந்தது.

இவ்வாறு திகதியிடப்பட்ட இரு படகுகளின் வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்ற சமயம் படகுகளை மீட்டுச் செல்லும் நோக்கில் உரிமையாளர்கள் இருவரும் சட்டத்தரணிகள் மூலம் மன்னார் நீதிமன்றில் பிரசன்னமாகினர்.

முதல் படகின் வழக்கு முதலில் எடுக்கப்பட்டது. வழக்கு விசாரணை இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதே சமயம், மன்றில் பிரசன்னமான படகின் உரிமையாளரை இன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மன்னார் நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதற்கமைய தமிழகம், இராமநாதபுரம், பாம்பனைச் சேர்ந்த படகு உரிமையாளர் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இராமநாதபுரம், பாம்பன் பகுதியைச் சேர்ந்த அன்ரன் என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் இரண்டாவது படகின் உரிமையாளரும் நீதிமன்றத்துக்கு வருகை தந்தபோதும் முதலாம் வழக்கின் உரிமையாளருக்கு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்ட நிலையைக் கருத்தில் கொண்டு மற்றைய வழக்கில் மன்றில் முன்னிலையாகாமல் தவிர்த்து, அவர் வெளியேறிவிட்டார்.

## சர்வதேச நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கவும், முதலீடுகளை வலுப்படுத்தவும், மக்களின் பொருளாதாரப் பலத்தை வலுப்படுத்தவும் வழிவகுக்க வேண்டும் என்று இக்கலந்துரையாடலில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தனர்.

குறிப்பாக, நாட்டின் பாதிப் பேர் ஏழ்மையடைந்துள்ளனர். இந்நிலைமையால் குடும்பங் அலகுகளின் வருமானம் வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், பச்சிளம் குழந்தைகள், கர்ப்பிணிகள், தாய்மார்கள், சிறுவர்கள், 41 இலட்சம் பாடசாலை மாணவர்கள், இளைஞர்களிடையேயும் என ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள வறுமை ஒழிப்பு சமூக பாதுகாப்புத் திட்டங்கள் இதற்குப் போதுமானதாக இல்லை. ஜனசவிய வேலைத் திட்டத்தின் மாதிரியான புதிய சமூக பாதுகாப்புத் வேலைத்திட்டமொன்று தேவைப்படுகின்றது. நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு போன்ற பகுதிகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்புடன் எதிர்கொள்ள வேண்டும் என்ற தங்கள் முன்மொழிவுக்கு, முன்னதாகவே அரசு பதிலளித்திருந்தால் தற்போதைய நிலைமை உருவாகியிருக்காது என்றும் எதிர்க்கட்சி பிரதிநிதிகள் இங்கு சுட்டிக்காட்டினர்.

இலங்கையின்பொருளாதாரநெருக்கடியைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள பாதை வரைபடம் மற்றும் இலக்குகளை ஐக்கிய மக்கள் சக்தி சாதகமாக ஏற்றுக்கொண்டாலும் சில முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

பொது நிதி நிர்வாகம், நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவித்து, கடனை நிலையான முறையில் செலுத்துவதற்கான இயலுமையை ஏற்படுத்தும் விதமாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் சர்வதேச நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த வரி வருவாயை ஈட்டும் முன்மொழிவான, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான பெறுமானத்துடன் உடன்படலாம் என்றாலும், இந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் முறையை மாற்ற வேண்டும் என்றும் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

இது மக்களை ஒடுக்காத வகையிலும், சமூக நீதியை உருவாக்கக் கூடிய வகையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

வரி அறவீடு, கலால் வரி அறவீடு மற்றும் சுங்க வரி அறவீடு ஆகியவற்றை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்ள அனைத்து துறைகளையும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் அறவிட நடவடிக்கை எடுப்பது குறித்தும், இதற்கான ஏற்பாடுகளை விரிவுபடுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

அரசியல் ஆதரவு பெறும் வர்த்தகர்கள் மற்றும் கறுப்புச் சந்தை வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடுபவர்களின் இழந்த வருமானத்தைப் பெறுவதற்கான கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பிலும் பல விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

பொதுச் செலவின முகாமைத்துவத்தில் நிறுவனங்களின் செயல்திறன் அடிப்படையிலான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயமும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

சுருங்கிய பொருளாதாரம் அடுத்த பத்து ஆண்டுகளில், ஆண்டுக்கு 10 சதவீத என்ற நிலையான வளர்ச்சி விகிதத்தை அடைய திட்டமிடப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டதோடு, இதற்கான உபாங்களை வகுப்பதில் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் நிலைநிறுத்துவதே ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்பார்பாகும். இது உலகப் பொருளாதாரச் சந்தையில் நுழையும் போட்டிக் கட்டமைப்பாக இருக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முதலீட்டு மற்றும் சர்வதேச வர்த்தகக் கொள்கைகளை திருத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

சர்வதேச கடன் மறுசீரமைப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இதன் தாமதத்தால் முதலீடுகளின் மீது ஏற்படும் தாக்கம் அளப்பெரியது. இதற்காக கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு, நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீட்கப்பட்டு, சர்வதேச கடன் தரவரிசையில் நுழைவதன் முக்கியத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி புரிந்துகொண்டுள்ளது என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

குடியரசு என்ற வகையில் கடனைச் செலுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. கடனை மறுசீரமைப்பதில் நாடு கூடிய நன்மையையும் தள்ளுபடியையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற விடயம் தொடர்பாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

இதற்கிடையில், ஏதேனும் கடன் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால், அது எந்தத் தயக்கமுமின்றி விசாரிக்கப்பட்டு, அதற்குக் காரணமான தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விடயமும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

சில அரச முயற்சியாண்மைகளில் நிறுவனங்களில் ஊழல், வீண்விரயம் மற்றும் மோசமான முகாமைத்துவம் ஆகியவை பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான நிறுவனங்களை மறுசீரமைப்பதில் நாட்டுக்கு ஏற்ற உபாயங்களில் செயற்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், இலங்கையில் தாய்மார்கள், சிசுக்கள் மற்றும் குழந்தைகளின் போசாக்கு குறைபாடு கடந்த காலங்களில் உயர் மட்டத்தை எட்டியுள்ளது என்று சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், இதற்குச் சாதகமான தலையீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அவ்வாறே, இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில், நாட்டின் தேசிய வருமானத்தில் 50 சதவீத பங்களிப்பையும், 52 சதவீத வேலை வாய்ப்பையும் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறையினரின் பிரச்சினைகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது கடும் நெருக்கடியில் உள்ள விவசாயிகள், மீனவர்கள், சுயதொழில் புரிவோர், அரச ஊழியர்கள் மற்றும் மத்திய தர மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் இங்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டன.

நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வரும் நிலையில், குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், எந்தச் செல்வாக்குக்கும் ஆளாகாமல் பலதரப்பட்ட மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. அஸ்வெசும திட்டத்தை மறுஆய்வு செய்வதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர், சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவின் பிரதித் தலைவர் கத்யா ஸ்விரிட்சென்கா, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சர்வத் ஜஹான் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் எரான் விக்கிரமரத்ன, கபீர் ஹாசிம், கலாநிதி ஹர்ஷ டி சில்வா, நிரோஷன் பெரேரா, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நாலக கொடஹேவா, சந்திம விரக்கொடி, எம்.வேலுகுமார், ஹர்ஷன சுபுன் ராஜகருணா ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், சுஜீவ சேனசிங்கவும் இந்தச் சந்திப்பில கலந்துகொண்டனர்.

மேலும், நுண், சிறய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள், தொழில்முனைவோரை பிரதிநிதித்துவப்படுத்தி, டானியா அபேசுந்தர, மகேந்திர பெரேரா, சுசந்த லியனாராச்சி, சுரேஷ் ராகவன் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## யாழில் கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாவற்குழியைச் சேர்ந்த சிவநேசன் திவ்யன் (வயது 21), செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த தேவன்கருணதாசா யூட் (வயது 36) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதியொன்றின் உரிமையாளர் மற்றும் பணியாளர்கள் இருவர் என மூவர் கடற்கரையில் நீராடிய நிலையில் இருவர் அலையடித்துக் காணாமல்போய் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இணைப்பு: முதலில் எதற்கு?

இலங்கை - இந்திய இணைப்புகள் பற்றிப் பெருமிதமாகப் பேசியிருக்கின்றார் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா.

இலங்கை - இந்திய சங்கத்தின் வருடாந்த இரவு விருந்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிராந்தியங்களின் இணைப்புக் குறித்துப் பெருமிதம் தெரிவித்திருக்கின்றார் இந்தியத் தூதுவர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் அருகில் வைத்துக்கொண்டு, பிராந்தியங்களுக்கு இடையிலான இணைப்புத் தொடர்பில் புதுடில்லி அண்மைக்காலமாக முன்னெடுத்த அரசியல் நகர்வுகளை சிலாகித்திருக்கின்றார் தூதுவர் ஜா.

தமிழகத்தையும் இலங்கையையும் தரை, கடல், வான் வழியாக இணைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை அவர் விவரித்தார்.

யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையிலான சர்வதேச விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சேவையை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவுக்கும் வட இலங்கைக்கும் இடையிலான படகுச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயணிகள் படகுச் சேவை எந்த நேரத்திலும் தொடங்கலாம். சரக்குப் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையிலான பயணிகள் சேவையும் விரைவில் ஆரம்பிக்கும் சாத்தியம் இருப்பது குறித்தும் தீவிரமாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இவற்றிற்கு அடுத்த கட்டமாக இலங்கைக்கும் அருகில் உள்ள இந்தியாவுக்கும் இடையில் தரை வழி இணைப்புக் குறித்தும் தீவிரமாக ஆராயப்படுகின்றது என்பதை இந்தியத் தூதுவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இந்தத் திட்டத்தை சாத்தியப்படுத்துவதற்கான முதல் படிகளை எடுத்து வருகிறோம் என தூதுவர் ஜா திருப்தியோடு குறிப்பிட்டிருக்கின்றார்.

தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னார் வரை - ஏற்கனவே இராமர் பாலம் இருந்ததாகக் கருதப்படும் கடல் பாதையை ஒட்டி - சமுத்திரத்தின் ஊடாக 23 கிலோமீட்டர் நீளமான பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வை இந்திய அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டதாக அண்மையில் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்தப் பாலத்தின் தொடராக, மன்னாரில் இருந்து திருகோணமலை வரை, இலங்கை தீவின் குறுக்காக, அதிவேக நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பது குறித்தும் இந்தியா மனம் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

அதாவது இராமேஸ்வரம் - திருக்கேதீஸ்வரம் - திருகோணேஸ்வரம் என மூன்று ஈஸ்வரங்களையும் இரண்டு மணி நேரத் தரை வழிப் பயணம் மூலம் தரிசிக்கும் திட்டம் பற்றிய விடயமே இது.

தரை, கடல், வான் மூலமான இணைப்பு மாத்திரம் பற்றியல்லாமல் அதையும் தாண்டி, காற்று, டிஜிட்டல், வர்த்தகம், மின் இணைப்புக் கேபிள்கள், எரிபொருள் விநியோகக் குழாய்கள் மூலமாக இந்திய - இலங்கை இணைப்பை மேலும் வலுப்படுத்துவது பற்றி எல்லாம் கூட தூதுவர் ஜா குறிப்பிட்டிருக்கின்றார்.

தத்துவார்த்த நிலையில் நல்ல கோட்பாடு. கொள்கைச் சிந்தனைதான். அதில் சந்தேகம் ஏதுமில்லை.

இத்தகைய இணைப்புகள் மூலம் தமது நாட்டின் 'தேசிய இறையாண்மை' அழிக்கப்பட்டு, அகண்ட பாரதத்தின் அடிமைத்துவமாக இலங்கை மாறும் ஆபத்து ஏற்படும் என்று சிங்களத் தேசியவாதிகள் கூச்சலிட்டு வருகின்றனர்.

ஆனால், தமிழகத்துடன் பக்கத்தில் இணைக்கப்படக் கூடிய இலங்கையின் பிரதேசம் வடக்கும் கிழக்கும்தான்.

அது, இந்தத் தீவின் தமிழர் தாயகம். அவர்களின் பாரம்பரிய வாழிடம். தமிழக உறவுகளை தமது தொப்புள் கொடி பந்தமாகக் கொண்ட மக்களின் வாழ்விடம்தான் அது.

ஆகவே தூதுவர் சந்தோஷ் ஜா குறிப்பிடும் இணைப்புகள் குறித்து வடக்கு - கிழக்கின் தமிழர்களுக்கும் சந்தோஷம்தான். சிங்கள தேசியவாதிகள் போன்று அதற்கு அவர்கள் அனர்த்தமான அர்த்தத்தைக் கற்பிக்க மாட்டார்கள் கற்பிக்கவும் முடியாது.

ஆனால் ஒன்றை மட்டும் அந்த வடக்கு - கிழக்கு தாயக மக்களான தமிழர்களின் சார்பில் கூறி வைக்க விரும்புகிறோம்.

தரை, வான், கடல், காற்று, டிஜிட்டல், கேபிள், எரிபொருள் விநியோகக் குழாய் வழியான இணைப்புகளுக்கு முன்னர் ஈழத் தமிழர்களுடன் மனதால் இணைப்பைச் செய்து கொள்ளுங்கள்.

அதைப் புதுடில்லி சிதறடித்து ஆண்டுகள் பலவாகிவிட்டன - மீளக் கூட்டிணைக்க முடியாத பிளவாக அது போய்க் கொண்டிருக்கின்றது. அதனை முதலில் கவனியுங்கள்.

அதன் விவரத்தை பின்னர் ஒரு தடவை விரிவாகப் பார்ப்போம்.

# உலகிலேயே மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் பின்லாந்து முதலிடம், இஸ்ரேஸ் 5 ஆம் இடத்தில்



2024 ஆம் ஆண்டுக்கான உலகின் மிக மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் வெளியாகியுள்ளது. வழக்கம்போல் நோர்டிக் நாடுகள் இதில் வெகுவாக இடம்பெற்றுள்ளன.

டென்மார்க்,நோர்வே,ஸ்வீடன்,பின்லாந்துமற்றும்ஐஸ்லாந்து ஆகிய நாடுகளுடன் ஃபரோ தீவுகள், கிரீன்லாந்து ஆகிய தீவுகளை உள்ளடக்கிய பகுதி நோர்டிக் பிராந்தியமாக அறியப்படுகிறது.

இந்த நோர்டிக் பிராந்திய நாடுகள் முதல் இடம்பெற்றுள்ளன. இஸ்ரேல் 5 ஆவது இடத்தில் இருக்க, இந்தியா கடந்த ஆண்டைப் போலவே 126 ஆவது இடத்தில் உள்ளது.

ஐ.நா.வின் ஆதரவோடு ஆண்டுதோறும் தயாரிக்கப்படும் இந்த உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் ஃபின்லாந்து முதலிடம் பெற்றுள்ளது.

டென்மார்க், ஐஸ்லாந்து 2 மற்றும் 3 ஆம் இடங்களைப் பிடிக்க, ஸ்வீடன் 4 ஆவது இடத்தில் உள்ளது. இஸ்ரேல் 5 ஆவது இடத்தில் இருக்கிறது.

143 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் கடைசி இடத்தை (143 ஆவது இடம்) பிடித்துள்ளது ஆப்கானிஸ்தான். அங்கு கடந்த 2020 ஆம் ஆண்டு தலிபான் ஆட்சி அமைந்த பின்னர் கடுமையான மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அதேவேளையில் இந்த அறிக்கையில் முதன்முறையாக அமெரிக்காவும், ஜேர்மனியும் முதல் 20 பட்டியலில் இடம்பெறாதது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா 23 ஆம் இடத்திலும், ஜேர்மனி 24 ஆவது இடத்திலும் இருக்கின்றன. மாறாக கோஸ்டாரிகா, குவைத் போன்ற நாடுகள் முத்த 20 பட்டியலுக்கு முன்னேறியுள்ளன. குவைத் 12 ஆவது இடத்திலும், கோஸ்டாரிக்கா 13 ஆவது இடத்திலும் உள்ளன.

# பிரான்ஸில் மில்லியன் கணக்கில் வீதிக்கிறங்கினர் அரச ஊழியர்கள்






பிரான்ஸில், ஆசிரியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் உட்பட மில்லியன் கணக்கான அரச ஊழியர்கள் பாரிய வேலைநிறுத்தத்தை முன்னெடுத்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்போது, அவர்கள் சம்பள உயர்வு கோரியும், அரசின் கல்வி சீர்திருத்தங்களை கண்டித்தும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த போராட்டத்திற்கு ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பொது நிர்வாக அதிகாரிகளும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, இந்த வேலை நிறுத்தத்தில் 5.7 மில்லியனுக்கும் அதிகமான பிரான்ஸ் அரச ஊழியர்கள் கலந்து கொண்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், பிரான்ஸ் பாடசாலைகளில் தரம் 6 க்குப் பிறகு மாணவர்களின் கற்றல் அளவை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தும் அரசின் முடிவும் ஆசிரியர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தொழிலாளர்களின் சம்பள உயர்வு பணவீக்க உயர்வுக்கு ஏற்ப இல்லை என போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# ஜேர்மன் அரசுக்கு மன நல பாதிப்பு

## ரஷ்யா கடும் விமர்சனம்

ஜேர்மன் அரசுக்கு ஏதோ மன நல பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ரஷ்யா கடுமையாக விமர்சித்துள்ளது.

ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீண்டும் தெரிவானது தொடர்பில் ஜேர்மன் எடுத்துள்ள தீர்மானமே அதற்கு காரணம் என கூறப்படுகிறது.

கடந்த 18 ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் விளாடிமிர் புடின் 88 வீத வாக்குகளுடன் வரலாற்று வெற்றியை பதிவு செய்தார்.

அதனை தொடர்ந்து, அந்த தேர்தல் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் இல்லை என தெரிவித்து வாக்குப்பதிவின் போது ஆயிரக்கணக்கான எதிரக்கட்சிக்காரர்கள் வாக்குச்சாவடிகளில் போராட்டத்தை நடத்தினர்.

அதேவேளை, அமெரிக்க வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு சபை செய்தித் தொடர்பாளரும், புடின் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களை சிறையில் அடைத்து, போராட்டங்களை நடத்த விடாமல் தடுத்தார், ஆகையால் இந்த தேர்தல் சுதந்திரமாகவும் மற்றும் நியாயமாகவும் இல்லை தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தேர்தலில் வெற்றி பெற்ற ரஷ்ய ஜனாதிபதி புடினை, ஜனாதிபதி என குறிப்பிடப்போவதில்லை என ஜேர்மன் சேன்சலரான ஓலாஃப் ஷோல்ஸ் அறிவித்துள்ளார்.



ஓலாஃப் ஷோல்ஸின் இந்த அறிவிப்பானது, ரஷ்யாவுக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளதுடன் அது முட்டாள்தனமான முடிவு என ரஷ்யா கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளது.

அத்தோடு, ஓலாஃப் அரசின் இந்த முடிவு, ஜேர்மன் அரசுக்கு ஏதோ மன நல பாதிப்பு ஏற்பட்டுள்ளதற்கான அறிகுறிகளாகத் தெரிவதாகவும் ரஷ்யா விமர்சித்துள்ளது.

# விருதுநகரில் விஜய பிரபாகரன் விருப்பு மனு தாக்கல் செய்தார்

அ.தி.மு.க. கூட்டணியில் விருதுநகர் தொகுதி தே.மு.தி.கவுக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் அத்தொகுதியில் போட்டியிட மறைந்த விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் நேற்று விருப்ப மனுவை தாக்கல் செய்துள்ளார்

நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலையொட்டி தமிழகத்தில் கூட்டணி பேச்சுவார்த்தைகள், தொகுதிப் பங்கீடு, வேட்பாளர்கள் அறிவிப்பு என அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

இந்த நிலையில், அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெறுள்ள தே.மு.தி.கவுக்கு விருதுநகர் உள்பட 5 தொகுதிகள் ஒதுக்கப்படுள்ளன.

மேலும் விஜயகாந்த் மறைவுக்குப் பின்னர் அக்கட்சியினருக்கு ஆதரவு வாக்கு அதிகம் கிடைக்கும் என்பதாலும், விஜயகாந்தின் சொந்த ஊரான அருப்புக்கோட்டை



அருகே உள்ள ராமானுஜபுரம் விருதுநகர் மக்களவைத் தொகுதிக்குள் வருவதாலும், விருதுநகர் தொகுதியை தே.மு.தி.க. தேர்ந்தெடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

# மிகவும் மாசடைந்த தலைநகராக இந்தியாவின் புதுடில்லி தேர்வானது



2023 ஆண்டின் உலகில் மிகவும் மாசடைந்த தலைநகரம் இந்தியாவின் புதுடில்லி என ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது.

சுவிட்சர்லாந்தை தலைமையகமாக கொண்ட காற்றின் தரக் கண்காணிப்பு குழுவொன்று மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக கடந்த வருடம், காற்று அதிகமாக மாசடைந்த நாடாக இந்தியா 3 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டில், இந்தியா உள்ளிட்ட அதனை அண்டிய நாடுகளில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளது.

அந்த ஆண்டில் இந்தியா 8 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்தது.

மோசமான தொழில்துறை ஒழுங்குமுறை காரணமாக தொழிற்சாலைகள் மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பின்பற்றவில்லை என்பதால் புதுடில்லி உள்ளிட்ட இந்தியாவின் பல நகரங்களில் காற்றின் தரம் தொடர்ந்தும் மாசடைந்து வருவதாக சுவிட்சர்லாந்தை தலைமையகமாக கொண்ட காற்றின் தரக் கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

# பா.ஜ.க. கூட்டணியில் அ.ம.மு.கவுக்கு இரண்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டன

பா.ஜ.க.கூட்டணியில்அம்மாமக்கள்முன்னேற்றகழகத்துக்கு இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பா.ஜ.க. தலைமை அலுவலகமான கமலாலயத்தில் அண்ணாமலை மற்றும் டி.டி.வி தினகரன் கையெழுத்திட்டனர்.

இதன்பின் செய்தியாளர்களை சந்தித்த டி.டி.வி. தினகரன், “நாங்கள் கேட்ட தொகுதிகளை கொடுத்துள்ளனர். எந்தெந்த தொகுதிகள் என்பதை பா.ஜ.க. தலைமை அறிவிக்கும். நான் போட்டியிடுவது தொடர்பாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை. பா.ஜ.க. தலைமை தொகுதிகளை அறிவித்த பின் வேட்பாளர்கள் அறிவிக்கப்படுவார்கள்.

குக்கர் சின்னம் கேட்டு விண்ணப்பித்துள்ளோம். திராவிட இயக்கங்களை ஒழிப்போம் என்று பா.ஜ.க. தலைவர்கள் சொல்வது தி.மு.க, அ.தி.மு.கவை தான். ஜெயலலிதா திராவிட பாரம்பர்யத்தின் பரிணாம வளர்ச்சி. இங்கு பிறந்தவர்கள்



எல்லாம் திராவிடர்கள்தான். அதில் மாற்றுக்கருத்து இல்லை.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்கள் புதிய சாதனை படைப்பார்கள். நான் தேனியில் போட்டியிட வேண்டும் என்று நீண்ட நாளாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த முறை அங்கு போட்டியிடுவது தொடர்பாக வாய்ப்பு இருந்தால் பார்ப்போம்.” – என்றார்.





# ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கிய விரைவான மாற்றத்தை எதிர்பார்க்கிறோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவிப்பு

“இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளியை கடனாகப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் இன்னும் 10 வருடங்களில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க நேரிடும். நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி விரைவில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கேகாலை மங்கெதர டெம்பிடி புராதன பிரிவெனா விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட தங்க வேலியை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விகாராதிபதி ஶ்ரீஜனாநந்தபிதான தேரரின் கோரிக்கைக்கமைய கடவத்தையில் வசிக்கும் ஜகத் சுமித்ர கருணாரத்ன மற்றும் மல்லிகா கருணாரத்ன ஆகியோரின் நன்கொடையில் மங்கெதர டெம்பிடி புராதன விகாரையில் தங்கவேலி அமைக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஜகத் சுமித்ர கருணாரத்ன மற்றும் மல்லிகா கருணாரத்ன ஆகியோருக்கான நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை கடனைச் செலுத்தக்கூடிய நாடு என்பதை மீள உறுதிப்படுத்துவதற்கு அவசியமான பேச்சுவார்த்தைகளை ஜூன், ஜூலை மாதத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம் எனவும் அதன் பின்னர் இதுவரையில் எமக்கு கிடைக்காமலிருக்கும் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில் –

“சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் குறித்து கலந்துரையாடி விரைவில் அந்தப் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம். 2022 ஆண்டில் இலங்கை வங்குறோத்து நாடாக அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து, சர்வதேச நிதி நிறுவனங்களும், வங்கிகளும் இலங்கைக்குக் கடன் வழங்குவதை நிறுத்தின. அதனால் முதலில் அந்தத் தடையை நீக்கிக்கொள்ள, நாம் கடனை மீளச் செலுத்தும் வல்லமையுள்ள நாடு என்பதை உறுதி செய்ய வேண்டும்.

பொருளாதார நெருக்கடியிருந்து நாட்டை மீட்பதற்காக ஒரு வருடத்திற்குள் தீர்மானமிக்க பணிகளை ஆற்றியுள்ளோம். இதேநிலை தொடரும் பட்சத்தில் இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் நாட்டின் கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். வங்குறோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இது கடுமையான பணி என்ற போதிலும், மிகக் குறுகிய காலத்தில் அவற்றை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளோம்.

அதற்குரிய பேச்சுவார்த்தைகளை இந்த வாரத்திற்குள் முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை களை முன்னெடுக்கவுள்ளோம். அதன்பின்னர் கடன் வழங்கிய நாடுகளுடன் இணைந்து பிரான்ஸ், ஜப்பான், இந்தியா ஆகியவற்றின் பங்கேற்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.

அதேபோல் இலங்கை சார்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பணிக்குழு, சர்வதேச நாணய நிதிய பணிக்குழுவுடன் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டிற்கு வரவுள்ளது. அதேபோல் சீனாவுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம். மேலும் தனியார் கடன் வழங்குனர்களுடனும் பேச்சுக்களை முன்னெடுத்து வருகிறோம். நிதி அமைச்சின் செயலாளரும் மத்திய வங்கி ஆளுநரும் மீண்டும் ஐரோப்பாவிற்குச் சென்று மேற்படி குழுவினருடன் கலந்துரையாடவுள்ளனர்.

அதன்படி வங்குறோத்து நிலையிலிருந்து நாடு விடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னர், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணை பேச்சுவார்த்தையொன்றை ஏப்ரல் மாதமளவில் முன்னெடுக்கவுள்ளோம். அதன் பின்னர் அதிகாரிகள் மட்ட ஒப்பந்தத்தில் விரைவில் கைசாத்திட எதிர்பார்க்கிறோம்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் ஜூன், ஜூலை மாதங்களுக்குள் நிறைவடையும். எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் அதற்கு முன்னதாகவே இந்த செயற்பாடுகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் உலக அரங்கில் கடனை மீளச் செலுத்தக்கூடிய நாடு என்ற உறுதியைப் பெற்றுக்கொள்வோம். இதுவரைக் காலமும் தடைப்பட்டிருந்த நிதி உதவிகள் நாட்டிற்கு கிடைக்க ஆரம்பித்த பின்னர் நாட்டின் டொலர் கையிருப்பு அதிகரிக்கும்.

தற்போதும், பல்வேறு வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் எம்முடன் வணிகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதைத் தவிர்த்து வருகின்றன. மேற்கூறிய செயற்பாடுகளை நிறைவு செய்யும் பட்டசத்தில் அவர்களின் ஒத்துழைப்பு மீளக் கிடைக்கும். அதனால் எமது நாணயக் கையிருப்பும் அதிகரிக்கும்.

நாம் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தை கடந்து வந்த போது அதிலிருந்து மீள்வதற்கு கடினமான பல தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அந்த நிலையிலிருந்து மீண்டு நிவாரணங்களை வழங்கக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

தற்போதும் ரூபாவின் பெறுமதி வலுவடைந்திருக்கும் நிலையில் ஜூன் மாதமளவில் டொலரின் பெறுமதி 280 ரூபா வரை வீழ்ச்சியடைந்து ரூபாவின் பெறுமதி வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் பொருள்களின் விலை குறைவடையும். அடுத்த வருடத்தில் ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடையுமென எதிர்பார்க்கிறோம்.

இந்த தமிழ் சிங்கள புத்தாண்டுக்குள் அரச ஊழியர்களின் சம்பளம் 10,000 ரூபாவினால் அதிகரிக்கப்படும். அத்துடன் அஸ்வெசம வேலைத்திட்டத்தின் மூலம் சமுர்தித் திட்டத்தைப் போன்று மூன்று மடங்கு நன்மைகளை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை 18 லட்சத்தில் இருந்து இருபத்தி நான்கு லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.”

– என்றார்.







# சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளைச் சந்தித்த சஜித் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள்












# முஸ்லிம் மக்கள் சுன்னத் செய்கின்றமையை தடைசெய்வோம் என நாங்கள் கூறவில்லை

## தேசிய மக்கள் சக்தியின் பிரமுகர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ விளக்கம்

(கனகராசா சரவணன்)

தேசிய மக்கள் சக்தியின் 2019 ஆம் ஆண்டின் கொள்கை வெளியீட்டில் பெண்கள் மற்றும் ஆண்களின் பாலுறுப்புத் தொடர்பான விருத்தசேதனம் செய்தல் தொடர்பில் பாதிப்புக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாகின்ற விடயங்களைத் திருத்தயமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். ஆனால் முஸ்லிம் மக்கள் சுன்னத் மற்றும் கத்னா செய்வதை தடைசெய்வோம் எனக் குறிப்பிடவில்லை என்று ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று புதன்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சீதனம், விருத்தசேதனம் போன்ற நடைமுறைகள் காரணமாக பெண்கள் மற்றும் ஆண்கள் பாதிப்புறுவதை, துன்புறுத்தலுக்கு ஆளாவதை தடுப்பதற்கான சட்டங்களை தேசிய மக்கள் சக்தி உருவாக்குவது பற்றிய விடயங்கள் சமூகவலைத்தளங்களில் வெளிவந்தன. அதில் முஸ்லிம் மக்கள் சுன்னத் மற்றும் கத்னா செய்வதை தடுத்து நிறுத்தப்போதாகவும் குறிப்பிடப்பட்டன.

அது பெண்களின் சமவாயத்திலும், தேசிய மக்கள் சக்தியின் 2019 ஆம் ஆண்டின் கொள்கை வெளியீட்டிலும் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு வாக்கியம். அது பொய்யான விடயமல்ல. அதில் பெண்கள் மற்றும் ஆண்களின் பாலுறுப்புத் தொடர்பான விருத்தசேதனம் செய்தல் தொடர்பில் பாதிப்புக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாகின்ற விடயங்கள் தொடர்பில் திருத்தயமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் தெட்டத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவற்றை இல்லாதொழிப்பதாக நாங்கள் குறிப்பிடவில்லை. சுன்னத் செய்வதை தடைசெய்வோம் என்று நாங்கள் குறிப்பிடவில்லை. எவரேனும் ஒருவர் பாதிப்புக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாவதற்கு எதிரான சட்டங்களை ஆக்குவதாகத்தான் கூறியிருக்கின்றோம்.

இது வெறுமனே கொள்கை வெளியீட்டுக்கு வந்த ஒரு வாசகம் அல்ல. 1989 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் துன்புறுத்தல் எனும் சொல்லுக்கான வரைவிலக்கணம் தெளிவுப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதில் முதலாவது விடயம் பெண்களுக்கான விருத்தசேதனம் செய்வது பற்றியதாகும். பெண்களுக்கு விருத்தசேதனம் செய்வது சுகாதார ரீதியாக அல்லது இனப்பெருக்க ரீதியாக சாதகமானதாக அமையமாட்டாதெனவும்



அது தவிர்க்கக்கூடிய ஒரு விடயம் எனவும் முஸ்லிம் சமூகத்திலும் கூட ஏற்றுக்கொள்கிறார்கள். பலர் அதனை மறுக்கிறார்கள்.

ஆண்களின் விருத்தசேதனம் தொடர்பாக துன்புறுத்தல் என்பதற்கு பின்வருமாறு பொருள் விளக்கம் கொடுக்கப்படுகின்றது. பலவந்தமாக, சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கு முரணாக பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்கள் இன்றிய செயற்பாங்கு ஒன்றுதான் துன்புறுத்தல் எனக் கூறப்படுகின்றது.

ஒருவர் துன்புறுத்தலுக்கு இலக்காவார் என்றால் அதற்கெதிராக சட்டங்கள் ஆக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. 195 நாடுகள் இதனை அங்கீகரித்திருக்கின்றன. பெரும்பாலான முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசாங்கங்களும் இதனை நிறைவேற்றுவதற்காக கையை உயர்த்தியிருக்கின்றன. இது உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வாசகம்.

தற்போது முஸ்லிம் சமூகத்தில் ஆண்களுக்கு சுன்னத் செய்து வருகிறார்கள். சுகாதார பாதுகாப்பு வழிமுறையின் கீழ் பயிற்றப்பட்ட சுகாதார பணியாளர்கள் மூலமாக அதனை செய்து வருவதாக அவர்கள் கூறுகிறார்கள். மறுபுறத்தில் இதனை செய்யும் போது பிள்ளையின் அனுமதியைப் பெறுவதற்கு கால அவகாசம் கிடையாது. ஏனெனில், குழந்தை பிறந்து ஓரிரு நாட்களுக்குள் சுன்னத் செய்யப்படுகின்றது.

பெற்றோரின் விருப்பத்தின் பேரில் தான் பிள்ளைகளை எடுத்துச் செல்கிறார்கள். நாம் இங்கு குறிப்பிடுவது அதைப்பற்றியல்ல. துன்புறுத்தல் என்பதற்கு இது ஏற்புடையதல்ல. பெற்றோரின் விருப்பத்துடன் வருகிறார்கள். சுகாதார பாதுகாப்புக்கு இணங்க பயிற்றப்பட்ட ஊழியர்கள்தான் இதனைச் செய்கிறார்கள். இதில் பிரச்சினை இல்லை. பலவந்தமாக, சுகாதார முறையியல்களை பின்பற்றாத செயன்முறை பற்றிதான் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே நாங்கள் கூறியுள்ள விடயம் மிகத் தெளிவாகவே இருக்கிறது.

ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவெனில், எமது பொருளாதாரத்தை சீராக்கக் கூடிய வேலைத்திட்டத்துடன் முட்டிமோத முடியாதவர்கள் வேறு குற்றச்சாட்டுக்களை எம்மீது சுமத்தி, இவ்வாறான சொற்களைப் பிடித்துக் கொண்டு கொள்கை வெளியீட்டினை வாசித்திராத முஸ்லிம் மக்களுக்கு வேறொரு திரிபுபடுத்தப்பட்ட செய்தியைக் கொடுக்க முயற்சி செய்கிறார்கள்.

உண்மையிலேயே இவ்வாறான செய்திகள் ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இருந்துதான் வருகின்றன. தற்போது இந்த ஊடகப் பிரிவில் இருப்பவர்களும் இதற்கு முன்னர் அதில் தொழில் புரிந்தவர்கள் அல்லர். ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதியாக்கிய பின்னர் அங்குமிங்கும் அலங்கார மீன்களை வளர்த்தவர்கள், சின்ன சின்ன பிஸ்னஸ் செய்தவர்கள் சென்று ஜனாதிபதி ஊடகப் பிரிவில் தொழில் பெற்றார்கள்.

அவர்களுக்கு சம்பளம் கிடைக்கிறது. வாகனங்கள் கிடைக்கின்றன. எரிபொருள் கிடைக்கின்றது. தொலைபேசி கிடைக்கின்றது. பில் செலுத்துகின்றார்கள். இவை எல்லாமே மக்களின் வரிப்பணத்தைக் கொண்டுதான். இவர்கள் ஏதாவது சொற்களைப் பிடித்துக்கொண்டு சமூகவலைத்தளங்களில் போட்டு கேள்விக்கு உட்படுத்துகின்றார்கள். இதுவொரு பாரதூரமான விடயம்.


எமது நாட்டிலே சமயங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை மக்கள் தீர்மானகரமாக நிராகரித்துள்ளார்கள். அப்படி நடந்திராவிட்டால் கோட்டாபய ராஜபக்ஷ இன்னமும் ஜனாதிபதியாக இருந்திருப்பாரே? காலிமுகத்திடல் போராட்டத்தின் போதும், அதன் பின்னரும் மக்கள் இந்த இனவாதத்தை, மத தீவிரவாதத்தை எதிர்த்தார்கள்.

நாட்டு மக்களின் வரிப்பணத்தொகையில் சுகபோகம் அனுபவித்துக்கொண்டு இவர்கள் என்ன செய்கின்றார்கள்? இனவாதத்தை தூண்டிவிடுகின்றார்கள். முஸ்லிம் மக்களிடையே தவறானதொரு எண்ணத்தை ஏற்படுத்த விழைகிறார்கள். எமது கொள்கை வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தைப் பாருங்கள். ஏன் நாங்கள் சீதனத்தைப்பற்றி கதைக்கின்றோம்? சீதனத்திற்கும் இதற்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

ஒரு தகப்பன் தன்னுடைய பெண் பிள்ளை திருமணம் செய்யும்போது விருப்பத்துடன் சீதனம் கொடுத்தால் அதனைத் தடுக்க முடியாது.

ஆனால் சீதனம் என்பது ஒருவரை துன்புறுத்தக்கூடியதாக – பலவந்தமாக – மேற்கொள்ளப்படுமானால் அத்துடன் அந்த சீதனத்தை கொடுக்காதிருப்பதன் மூலமாக குடும்பத்துக்குள்ளே எவராவது பாதிக்கப்படுவாரேயானால் பிரஜையொருவர் அந்த துன்புறுத்தலுக்கு எதிராக செயலாற்ற வேண்டுமென நாங்கள் கூறியுள்ளோம். இதைத்தான் நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம். சமய மரபுகளின் அடிப்படையில் சுன்னத் செய்வதை தடுப்பது எமது நோக்கமல்ல. – என அந்த அறிக்கையில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# யோகர் குருவின் சரிதம் அற்ற திரம்!




யோகர் சுவாமிகளை நேரில் தரிசித்தவர்களும் கற்றும் கேட்டும் அறிந்தோர்களும் அவரைப் பற்றிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளனர். அவ்வெழுத்துக்கள் மண்ணில் நடமாடிய யோகர் சுவாமிகளைப் பற்றியே பெரும்பான்மையாகக் கூறின. யோகர் சுவாமிகளின் மானுடப் போர்வைக்குள் அவரின் உண்மைச் சிவசொரூபம் மறைந்திருந்தது. அதனைக் கண்டு எழுதும் ஆற்றல் படைத்தோர் எவரும் இருக்கவில்லை.

இதனைக் குறித்தே சுவாமிகள் “எங்களைப் பற்றி எழுதக் கூடியவர்கள் இன்றும் இல்லை இனி என்றும் வரப்போவதுமில்லை” எனக் கூறினர்.

ஆயின் யோகர் சுவாமிகள் தன்னைத் தன்னால் அறிந்தவர். அவர் தன்னை அறிந்து தெளிந்து உணர்ந்து அவ்வுண்மையில் உறுதியுற்றிருந்தவர். அந்த உண்மையில் தூண் போன்று இருந்தார். அவரால் தன்னைப் பற்றி எழுத முடியும். ஆனால் அந்தத் தன்னுண்மையில் பேர், ஊர் இல்லை, பிறப்பு, இறப்பு இல்லை, இளமை, முதுமை இல்லை. போக்குவரவில்லை. கால தேசவர்த்தமானம் இல்லை. நீ நான் இல்லை. நல்லது கெட்டது இல்லை. நேற்று, இன்று, நாளை என்பன இல்லை. ஆதலால் இவற்றைப் புனைந்து எழுதும் சரிதம் என்பதும் அவருக்கு இல்லை. சரிதம் இல்லை எனினும் அவர் “திரம் இது பொருள்” எனும் உண்மையில் திடம் பெற நின்றார். அதில் அவர் குன்று போல நின்றார். நின்ற நிலையில் பிரியாதிருந்தார்.

அந்தத் திரத் தன்மை அவரது திருவாய்மொழிகளில் தெளிவாகத் தெரிகிறது. அத் திரத்தன்மையில் மூன்று இயல்புகளைக் கண்டறிய முடிகிறது. அவற்றுள் ஒன்று அவர் தானாய் எங்கும் சென்றிருந்தார் என்பது. எங்கும் சென்றிந்திருந்தவர் எனினும் ஏதொன்றிலும் தட்டாது முட்டாதிருந்தார் என்பது இன்னொன்று. எல்லாவற்றுக்கும் அப்பால் தானே தானாய்த் தனியே சுகமாய் இருந்தார்.

“தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே தானாய் எங்கும் செறிந்திட வேண்டுமே” என அவர் தனது குருவிடம் வேண்டுவதான ஒரு வாசகம் நற்சிந்தனையில் உள்ளது. இவ்வேண்டுதல் பலித்ததென்பதில் ஐயமில்லை. அவர் எங்கும் செறிந்த தன் உண்மையை அறிந்திருந்தார். அந்த ஞான விசரில்” அங்கும் இங்கும் எங்கும் நான் அதை அறியும் விசரன் நான்” என அவர் பாடுகின்றார். மேலும்,

எல்லாரிடத்தும் அடியேன் வாழ்வேன்
எல்லாரிடத்தும் அடியேன் தாழ்வேன்
எல்லார்க்கும் என்றும் அடியேன் கேள்வன்
சொல்லாற் பயனிலை என்றே சூழ்வன்
எல்லாருவமும் என்னுருவாகும்
எல்லார் நலன்களும் என் நலமாகும்
எல்லார் பலமும் என்பலமாகும்
நல்லோர் என்னுரை நயந்து கொள்வாரே

என்பது சுவாமிகளின் நல்லுரை. விளக்கமாகக் கூறப்பெற்றிருக்கும் சுவாமிகளின் இந்த நல்லுரை எல்லோராலும் அறிதற்கு உரிய தொன்றன்று. நல்லோர் மாத்திரமே இதனை அறிந்து நயக்க வல்லவராவர்.

எங்கள் ஆசான் அருள்மொழிகளில் ஓரிடத்தில் “எல்லாருள்ளும் நான் இருக்கிறேன் என்பதை எல்லோராலும் விளங்க முடியாது. என்று சுவாமிகள் கூறியிருக்கிறார். இதனை எல்லோரும் விளங்கும் வண்ணம், “இப்பொழுது நான் எங்கும் இருக்கிறேன் என்பது தெளிவு;ஆயினும் இப்படி ஒரு குடிசையில் இந்த உடலை வைத்திருக்க வேண்டியதே” என்ற வண்ணம் அவர் கூறியது முண்டு. அவரது மானுடப் போர்வை கொழும்புத் துறைக் கொட்டிலில் உறைந்தது: உண்மையான அவரோ “எங்கும் என்றன் தங்கும் வீடு” என்று எங்கும் செறிந்திருந்தார். எங்கும் செறிந்த ஆனந்தக்களிப்பில் அவர் பாடிய பாடலொன்றில்,


‘எல்லாம் என் கைவசமாச்சே சிவசிவ
எடுத்த பிறப்பின் பயன் சித்தியாச்சே
உல்லாசமாய்த் திரிய லாச்சே
உலகெல்லாம்

எனக் குறவாகிப் போச்சே’ எனப் பாடுகின்றார்.

மண்ணுலகில் மாத்திரமன்றி விண்ணுலகிலும் அவர் செறிந்திருந்தார். அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் தமது அகத்திலே தரிசித்துக் கொண்டிருந்தார். “என்னையன்றி வேறொன்றுமில்லை” என்று சொல்லும் வண்ணமாக மண்ணும் விண்ணும் அல்லும் பகலும் அதுவும் இதுவும் சொல்லும் பொருளும் என எல்லாவற்றிலும் செறிந்திருந்தார். எங்கும் செறிந்திருந்ததுடன் எல்லாவற்றையும்

தொடர்ச்சி ▼

# யோகர் குருவின் சரிதம் அற்ற திரம்!



தொடர்ச்சி ▲

ஆளவல்லவராயுமிருந்தார்.

அவர் "தேவாதிதேவரெல்லாம் செய்வார் பணிவந்து" அதிர வரும் நமனும் அஞ்சியே பணிசெய்யும் எனவும் பாடியிருக்கிறார். அவர் "நீயே உலகத்துக்கு ஏகசக்கராதிபதி" என்று உபதேசித்த போது தாம் அவ்வாறிருக்கும் தன்மையினாலேயே அதனை உறுதியாகக் கூறினார்.

சுவாமிகள் விண்ணும் மண்ணுமாகி நின்ற போதும், அவனியெல்லாம் ஆள்பவராயிருந்தபோதும், ஈதொன்றிலும் தட்டாது முட்டாது ஏதுமொன்றற நிற்பவராய் இருந்தார். அவர் உடம்போடிருந்தபோதும் உடலுபாதைகளால் தாக்குப் படாதவராயிருந்தார். உலகில் வாழ்ந்த போதும் உலகின் நன்மை தீமை அறியாதவராயிருந்தார். "இந்த உலகையும் உடலையும் மெய்யென நம்பி வாழ்பவர்கள் நீங்கள் நான் இந்த உடலையும் உலகையும் பொய்யெனத் துணிந்து பொருந்திய வண்ணம் வாழ்கிறேன்" என்ற வண்ணம் அவர் எழுதியிருக்கிறார்.

"வெப்பம், தட்பம், இளமை, முதுமை இயற்கையின் குணங்கள் இவைகளின் தீண்டுதலால் நாமேன் கவலைப்படுவான்? இவைகள் தோன்றி மறைவன நாமோ தோன்றுவதுமில்லை மறைவதுமில்லை உண்மை இன்மையாகாது: இன்மை உண்மையாகாது" என்ற உண்மையில் உறைத்து நின்றவர் அவர்.

அவர் சாதி, சமயம் என்னும் சங்கடத்துக்குள்ளாகாதவர் "பஞ்சம் படைவந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி" என்றும் "பரிதிகாயில் வாடாது பவனம் வீசில் வீழாது பரவை சூழில் ஆழாது" என்றும் அவரது திருவாய்மொழிகள் உள்ளன.

தானாய் எங்கும் செறிந்திருத்தல் சுவாமிகளது ஒருநிலை. எங்கும் நீக்கமற நிறைந்து நின்றபோதும் யாதொன்றிலும் தட்டாது, முட்டாது, தாக்குறாதிருத்தல் சுவாமிகளின் இன்னொரு நலம். இவற்றினும் மேலான உயர்வற உயர்ந்த நலத்தினராகவும் சுவாமிகள் உள்ளார்.

இவ்வுயர்நலத்தைச் சுவாமிகள்,

"முண்டகமலர்ப்பதம் கண்டேன்
மூவருந் தேவரும் முளைத்ததும் கண்டேன்.
உருகி உருகி உணர்ந்தேன் – சிவ சிவ
ஒன்றையும் காணாது நின்றேன்
மருமமிது பெரும் மருமம்
மகத்துக்களாலும் சொல்லொணா மருமம்"

எனப் பாடுகிறார்.

இவ்வாறு பாடும் அவர் தமது குரு மாதவரும் அறியாத மகத்தானாக நின்றது போலவே தாமும் நின்றார். அவர் முண்டக பலர்ப்பதம் கண்ட திறத்தைப் "பாதாரவிந்தம் பரவிக் கண்டேனே என்றும் பாடுவார். கண்ட திறத்தைக் கண்ட பத்து" எனும் பதிகத்தில் விரிவாகப் பாடி இறுதிப்பாடலில்,

"இரவு பகலற்ற ஏகாந்தவீட்டில் எனைப்
பரவிப் பணியவைத்தபரமன் குருவாகிச்
சரணகமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர் குறையாக் குளிர் நல்லை கண்டேனே"

எனப் பாடிப்பரவுகிறார்.

இந்தப் பாடலில் பரம்பொருளே குருவாக வந்து பாதமலரை யோகரின் சிரசில் சூட்டி ஏகாந்த வீட்டில் பரவிப் பணிந்திருக்கச் செய்தமையைக் காணக் கூடியதாகிறது. இந்த ஏகாந்த வீடு ஓங்கார மேடையின் மேல் இருக்கின்றது. இவ்வீட்டின் பள்ளியறையிலே நீங்காச் சிவகதியில் அவர் நிலைத்திருந்ததை,

"ஓங்காரக் கம்பத்தின் உன்னத மேடையில்
பாங்கான வீட்டுப் பள்ளியறையில்
தூங்காத திறவுகோல் கொண்டுதிறந்தால்
நீங்காச் சிவகதி நிச்சயமாமே"

என அவர் திடம்படக் கூறுகிறார்.

அவர் பட்டப்பகல் போல் ஒளிரும் வெட்டவெளி ஒன்றையே காண்கிறார். அவ்வெளி "செஞ்சரண (திருவடி) நிலவு விரிந்திருப்பதால் விளைந்தது. நிலவொளி போன்று குளிர் செய்வதாயிருப்பது. இந்த தண்ணென்ற சாந்த பத நிலையில் திருவடியின் செய்ய நடம் கண்டு களிப்பவராகவும் துய்ய அறிதுயில் புரிபவராகவும் உள்ளார். "எங்கள் வளநாடு" என்னும் பாடலில் இவற்றை விரிவாக விவரணஞ் செய்கிறார். இந்த வளநாட்டைக் கட்டு நமன் கிட்டுவதில்லை. கன்று மன வெப்பில்லை. துன்பக்களை இல்லை. இன்பப் பயிர் ஓங்கி வளர்கிறது. தேடித்தேடித் திரிந்தலைந்து நான் சிந்தை தெளிந்தேனே என்ற இனிய கீதத்தில் யோக சுவாமிகளது உயர் நலம் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

இந்தக் கீதத்திலே அவர்,

"சிந்தையிற் கண்டே என் தீவின் போச்சுது
சிவபெருமான் தன் இணையடி வாய்த்தது

எனத் தான்பெற்ற பெரும் பேற்றைப் பாடுகிறார்.

இவற்றைப் போன்று தனது உயர்வற உயர்ந்த நிலையை நற்சிந்தனையில் பாடியிருக்கின்றார். இவற்றில் சரிதம் இல்லை திரம் உண்டு.

**சிவதொண்டன் சபையினர்,**
**யாழ்ப்பாணம்.**




## வெடுக்குநாறிமலையில் நடந்த அராஜகம்

# பொலிஸார் மீது யாழ். பல்கலை மாணவர்கள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

வெடுக்குநாறிமலையில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பொலிஸ் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட வழிபாட்டு உரிமை, உயிர் வாழ்வதற்கான உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் அன்றைய தினம் சிவராத்திரி வழிபாடுகளிற்குச் சென்றிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் இலங்கை மனிதவுரிமை ஆணைகுழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் நேற்று முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டது.

சிவராத்திரி தினத்தன்று பொது மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்கள் வழிபாடுகளிற்காகச் சென்றிருந்த நிலையில் நீண்ட நேரம் வழிபாடாற்றுவதிலிருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தமையோடு, செல்லும் பாதைகளெங்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு அனைவரும் அச்சுறுத்தல்களிற்கும் உள்ளாக்கப்பட்டு வழிபாட்டுரிமைகள் மீறப்பட்டிருந்தன. பெருமளவில் சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்டவர்கள் பங்குகொண்டிருந்த பூசை வழிபாடுகளில் தாகத்திற்கு அருந்துவதற்காகக் கொண்டு சென்ற குடிதண்ணீர்சிக் கூடப் பறித்து ஊற்றியும், தாங்கியில் வைக்கப்பட்டிருந்த நீரைத் திறந்து விட்டும், நீரை உள்ளே கொண்டு செல்ல விடாமல் தடுத்தும் மனிதாபிமானத்திற்கு விரோதமான செயல்களில் பொலிஸார் செயற்பட்டிருந்தமை உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.











# வெடுக்குமாறிமலையின் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் 3,000 ஆண்டு தொன்மையானது என்கிறார் சிறீதரன்

## நேற்று நாடாளுமன்றத்தில் அவர் எடுத்துரைப்பு




வெடுக்குமாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மூவாயிரம் ஆண்டுகள் பழமை வாந்தது. அப்பகுதியை சூழ தமிழர்களான நாகர்களே வாழ்ந்துள்ளனர் என வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன எனத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க் கட்சியால் கொண்டுவரப்பட்ட நம்பிக் கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

தொடர்ந்து உரையாற்றிய சிறிதரன்–

“பழமையும் பாரம்பரியமும் கொண்ட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் அடி வாரத்தில் தமிழ் பிராமியக் கல்வெட்டுகள் மற்றும் வட்டெழுத்துகளை காண முடியும். வெடுக்குமாறிமலையின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வரம் என்ற சிவன் ஆலயம் அமைந்துள்ளது.

ஐந்து தலைமுறைகள் கடந்து அங்குவாழும் மக்கள் இந்த ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். 1988ஆம் ஆண்டு அப்பகுதி இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த போது, அவர்களது பாதுகாப்புடன் அங்கு மகாசிவராத்திரி இடம்பெற்றிருந்தது.

1990களின் பின்னர் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் அங்கு மகா சிவராத்திரி இடம்பெற்று வந்தது.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தப் பின்னரும் அங்கு குடியேறிய மக்கள் 2010ஆம் ஆண்டுமுதல் ஆதிலிங்கேஸ்வரரை வழிபட்டு வந்துள்ளனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் இந்த ஆலயத்தை கைப்பற்ற பௌத்த துறவிகள் செயல்பட்டு வருகின்றனர்.

2018ஆம் ஆண்டு முதல் இங்கு தமிழர்களின் வழிபாட்டு உரிமையை பறித்து வருகின்றனர். அதன் பின்னர் இங்கு வழிபடும் உரிமையை பறிக்கும் வழக்கு 2019இல் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டது. இதன்மூலம் ஆலய பூசகர் உட்பட பலர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

தொல்பொருள் திணைக்களத் தாலும் 2019ஆம் ஆண்டு வழக் கொன்று தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், ஆலயத்தின் அனைத்து விக்கிரகங்களும் அடியோடு அகற்றப்பட்டமை 2023ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது.

புதரொன்றில் எறியப்பட்டிருந்த சிவலிங்கத்தை மீண்டும் அங்கு பிரதிஷ்டை செய்து பிரதேச மக்கள் வழிபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இவ்வாண்டு மகாசிவராத்திரியை சிறப்பாக செய்ய முற்பட்ட போது பூசகர் உட்பட 8 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

வழிபாடுகளை தடுக்க 500 இற்கும் மேற்பட்ட கலகம் அடக்கும் பொலிஸார் இங்கு நிறுத்தப்பட்டு மக்களை அடக்க முற்பட்டனர். பக்தர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலையும் நடத்தினர். பொலிஸார் இங்கு மனிதாபிமானமற்ற விதத்திலேயே நடந்து கொண்டனர்.

இந்த சம்பவத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இது மூவாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழர்களின் ஆலயமாகும்.

இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமை இல்லையென்றால் எவ்வாறு நல்லிணக்கம் பற்றி சிந்திக்க முடியும். நல்லிணக்கம் என்பது பேச்சளவில் இருப்பது அல்ல. ஒருநாட்டின் மக்களை அனுசரிப்பதில்தான் அது தங்கியுள்ளது.

ஆகவே, வெடுக்குநாறிமலையில் உள்ள மக்கள் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபட எந்தவொரு தடையும் இருக்க கூடாது.

ஜனாதிபதி மற்றும் தொல்பொருள் திணைக்களம் இதற்கு உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும்.” – என்றார்.

# சீனாவிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி



சீனாவிடம் முன்பதிவு செய்யப்பட்ட பெரிய வெங்காயத் தொகை இன்னும் 5 நாள்களில் நாட்டிற்குக் கிடைக் கப்பெறும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெங்காயத் தொகை நாட்டிற்கு கொண்டுவரப்பட்டதும், உள்நாட்டு சந்தையில் வெங்காயத்தின் விலை குறைவடையும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக பெரிய வெங்காயத்திற்கு பதிலாக இளஞ்சிவப்பு வெங்காயத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கு அறவிடப்படும் 70 ரூபா வரி 10 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இளஞ்சிவப்பு வெங்காயத்தின் விலை 500 ரூபாவிற்கும் அதிகமாக காணப்படுகின்றது.

# யாழ். பல்கலை இந்து கற்கைகள் பீடத்தின் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விவரிப்பொன்று இந்து கற்கைகள் பீட பீடாதிபதி ச.பத்மநாபன் தலைமையில் நேற்று நடைபெற்றது.


“இந்துக் கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்” எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம் நடத்தும் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு (ஐஉஊ) – 2023 இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா கலந்துகொள்வார். மாநாட்டில் 54 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்து கற்கைகள் பீடச்சபையின் ஏகோபித்த ஆதரவுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து தேகாந்த நிலையை அடைந்த அமரர் கு.நகுலேஸ்வர குருக்களுக்கு மெய்ப்பொருள் விருதும், சைவ சமூக பணியாற்றும் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனுக்கு ஞானவாய்ச்சியன் விருதும், இலங்கையில் இந்து பண்பாட்டுக்கு உழைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு சிவநிதி விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டில் இந்த ஆய்வு மாநாடு நடைபெறவுள்ளமை விசேட அம்சமாகும்.



# விசேட சுற்றிவளைப்புகளில் 913 சந்தேகநபர்கள் கைது!

போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்யும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட சுற்றிவளைப்புகளில் 883 ஆண்களும் 30 பெண்களும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 54 பேரை மேலதிக விசாரணைகளுக்காக தடுத்துவைக்க நீதிமன்ற அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

15 பேரின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 205 கிராம் ஹெரோயின், 269 கிராம் ஐஸ் மற்றும் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மொத்தமாக 85 சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதில் 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்புகளில் 5 பெண் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.03.2024

## மேஷம்

இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. உங்களின் சில சௌகரியங்களை நீங்கள் விட்டுக் கொடுக்க நேரும்.

பணிச்சூழல் கடினமாகக் காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. சிறப்பாக திட்டமிட்டு முன்னுரிமைப் படி பணிகளை ஆற்ற கற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப் படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதனை தவிர்த்தல் நலம்.

வீட்டின் புனரமைப்பு மற்றும் பராமரிப்புக்காகப் பணத்தைச் செலவு செய்வீர்கள். தேவையற்ற செலவுகளால் பண இழப்பு ஏற்படும்.

## ரிஷபம்

இன்று உங்கள் வளர்ச்சிக்கு உகந்த நாள். வாழ்க்கையின் யதார்த்தத்தை புரிந்து கொள்வீர்கள். புதிய அனுபவங்கள் கிடைக்கும். மகிழ்ச்சி காணப்படும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. நீங்கள் செய்யும் பணியில் திருப்தி காண்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பணத்தை முறையாக பயனுள்ள வழியில் செலவு செய்வீர்கள்.

அமைதியாக இருப்பதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலும்.

## மிதுனம்

ஆன்மீக பயணங்களுக்கு உகந்த நாள். உங்கள் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். பொறுமையுடன் இருந்தால் நல்லதே நடக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரிடும்.

உங்களின் வருத்தமான உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இன்று சுறுசுறுப்பாக இருந்து உங்கள் துணையுடன் வசீகரிக்கும் வகையில் பழகுவது நல்லது.

நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## கடகம்

இன்று சிறந்த அடித்தளத்தை அமைப்பதற்கும் நல்ல தரத்தை உருவாகுவதற்கும் அதிக சிந்தனை செய்வீர்கள். உணர்ச்சிவசப்படாமல் உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடன் சிக்கல்கள் வராமல் இருக்க அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதிலிருந்து விலகி இருங்கள். உங்கள் துணையுடனான அணுகுமுறையில் அமைதியும் கட்டுப்பாடும் தேவை.

அதிக வருமானம் சம்பாதிப்பது இன்று கடினமாக காணப்படும். பணப்புழக்கத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான நிலைத்தன்மை குறைந்து காணப்படும்.

## சிம்மம்

இன்று அதிர்ஷ்டத்தை அதிகமாக நம்பாதீர்கள். கடினமாக உழைத்து பலனுக்குக் காத்திருங்கள். இசை கேட்டல் திரைப்படம் பார்த்தல் போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் மன அமைதி பெறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்றப் பிரச்சினை காணப்படும். இந்தப் பிரச்சினைகளை தீர்த்து மகிழ்வுடன் வாழுங்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். உங்களிடம் இருக்கும் பணத்தை தக்க வைத்துக் கொள்வது நல்லது.

இன்று சுமாரான ஆரோக்கியம் காணப்படும். தோல் ஒவ்வாமை மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்று உற்சாகமான நாள். புதிய வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள். உங்கள் செயல்களை திட்டமிட்டு முறையாக செய்தால் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நல்ல பெயரும் புகழும் அடைவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்புவசப்பட்டு காணப்படுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பும் வாழ்க்கை தரமும் உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## துலாம்

இன்று நீடித்த முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். உயர்ந்த நிலையில் இருப்பீர்கள்.

பணியில் அர்ப்பணிப்பு தேவை. யோசித்து வேலை செய்ய வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பழகுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

பண வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. வங்கியிருப்பை சிறப்பாக பராமரிப்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தேக ஆரோக்கியம் உறுதியாக இருப்பதை உணர்வீர்கள்.

## விருச்சிகம்

உங்கள் உணர்சிகளை கண்காணிக்க வேண்டும். பொறுமையும் நம்பிக்கையும் தேவை. நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றியை நோக்கி பயணிக்கலாம்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணியை கவனமுடன் ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். சரியான நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும். பணியில் நற்பெயர் கிடைக்கும்.

விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையாரின் கருத்துக்கும் மதிப்பு கொடுப்பதன் மூலம் அனைத்தும் சிறப்பாக நடக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவினங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையைத் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.03.2024




இன்று சிறிது அசௌகரியத்தை உணர்வீர்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

இன்று பணிச்சுமை காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செயல்படுத்துவது சிறந்தது.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை சகஜமாக வெளிப்படுத்த வேண்டியது அவசியம். உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். சிறிய கடன்கள் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

ஒவ்வாமை காரணமாக இன்று சளி மற்றும் இருமலால் பாதிப்படைவீர்கள்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாளாக அமையும். உங்களை முன்னேற்றிக் கொள்வதற்கு உகந்த மன நிலையில் காணப்படுவீர்கள். திருப்தி காணப்படும். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். பணியில் நேர்மையாக இருப்பீர்கள். சிறந்த அர்ப்பணிப்போடு பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை நட்பு முறையில் பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும். அன்பு அதிகரிக்கும்.

பண வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு பணம் காணப்படும்.




இன்றைய நாள் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். அதனால் திருப்தி உண்டாகும். உங்களை விட மூத்தவர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

புத்துணர்ச்சியோடு பணி புரிய வேண்டும். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இன்று உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் நண்பர்களிடமிருந்து எதிர்பாராத பரிசாக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் செயல்களில் தவறுகள் நேராமல் இருக்க பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து நடைபெறும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிக்க அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நடந்தால் உறவு மலர்ந்து மணம் வீசும்.

ஆன்மீக பயணத்துக்குப் பணத்தைச் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களை பரிசோதிக்க வேண்டும்.பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# உயர்நீதிமன்றை அவமதித்த சட்டத்தரணி ஒருவர் கைது

உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நீதிமன்றத்துக்குள் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதியரசர்கள் ப்ரீதி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர, குமுதினி விக்ரமசிங்க ஆகிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாத்தினரின் உத்தரவிற்கிணங்க, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சட்டத்தரணியை ஏப்ரல் 3 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சிறை அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் இந்த வழக்கின் விசாரணை முடியும் வரை இவரை சட்டத்தரணி பணியில் ஈடுபடவிடாமல் இடைநீக்கம் செய்தும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சட்டத்தரணி சுசில் பிரியந்த ஜயதுங்க, உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளைப் புறக்கணித்து, உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டார் எனவும், மீண்டும் மீண்டும் தனது சமர்ப்பணங்களை முன்வைத்தார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டது.

இது தொடர்பில் சட்டத்தரணிக்கு எதிராக ஒழுங்கு விதி ஒன்றை உருவாக்கி அடுத்த விசாரணைத் திகதியில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதியரசர்கள் குழாம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த சட்டத்தரணியின் உடல்நிலை குறித்து அறிக்கை பெறுவதற்காக, மனநல மருத்துவரிடம் அவரை ஆஜர்படுத்துமாறும் சிறைத்துறை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.




# ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் வெப்பநிலை சூடு கிளப்பும்

நாட்டில் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியில் இருந்து அதிக வெப்பமான வானிலையை எதிர்பார்க்கலாம் என சமுத்திரவியல் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எல்-நினோ தாக்கத்தினால் பருவ மழையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குருநாகலில் இன்று அதிக வெப்பநிலை பதிவானது. 36.1 பாகை செல்சியஸாக குருநாகலில் வெப்பநிலை பதிவானது.

இரத்தினபுரி மாவட்டத்தில் 35.4 பாகை செல்சியஸாக வெப்பநிலை இருந்தது.

வடமேற்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களிலும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மொனராகலை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பம் கவனத்திற்கொள்ள வேண்டிய மட்டத்தில் காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.